www.Padasalai.Net www.CBSEtips.in



# அரசு மேல்நிலைப்பள்ளி, MGR நகர், சென்னை-78
# மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான வினாவிடை தொகுப்பு
# காலாண்டுத் தேர்வுக்கான பாடப்பகுதி மட்டும் (2022-2023)
# 10-ம் வகுப்பு சமூக அறிவியல்-வரலாறு - இரண்டு மதிப்பெண்கள்

**1. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?**

1. இங்கிலாந்து, 2.பிரான்ஸ், 3.ரஷ்யா

**2. பதுங்குகுழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

1. முதல் உலகப்போரில் அறிமுகம்
2. போர் வீரர்கள் தங்களைப் பாதுகாக்கதோண்டிய குழிகள்.
3. குழிகள் மூலம் உணவு, ஆயுதம், வீரர்கள் வருவர்

**3. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மை மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?**

1. உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி
2. வேளாண் பொருட்கள் பாதிவிலையானது
3. குத்தகை தொகை மாறவில்லை.

**4. இந்தோ-சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

1. வியட்நாம் வீரர்களின் ராணுவ புரட்சி ஒடுக்கப்பட்டது.
2. கம்யூனிஸ்ட்களின் விவசாய புரட்சி ஒடுக்கப்பட்டது.
1. 1000 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

**5. முத்து துறைமுக நிகழ்வை விவரி?**

1. 1941-ல் அமெரிக்க கடற்படை தளமான முத்து துறைமுகத்தை ஜப்பான் தாக்கிய நிகழ்வு .
2. கோபமுற்ற அமெரிக்கா, ஜப்பான் மீது போர் தொடுத்தது.

**6. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?**

1. சதி, பலதார திருமண ஒழிப்பு.
2. குழந்தை திருமணம் எதிர்ப்பு
3. விதவை மறுமணம் ஊக்குவிப்பு

**7. பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை பட்டியலிடுக**

1. சங்கத்திற்கென இராணுவம் இல்லை.
2. கூட்டு பாதுகாப்பு கோட்பாடு செயல்படவில்லை.

**8. டாலர் ஏகாதிபத்தியம் தெளிவுபட விளக்குக**

1. அமெரிக்கா தொலைதூர நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்தல்.
2. பின்னர் ஆதிக்கம் செலுத்தி தக்கவைத்தல்.

**9. முதல் உலகப்போருக்கு பிந்தைய உலகத்தில் மூன்று சர்வாதிகள் யாவர்?**

1. ஹிட்லர்
2. முசோலினி
3. பிராங்கோ

**10. பிரெட்டன் - உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக**

1. உலக வங்கி
2. பன்னாட்டு நிதி அமைப்பு

**11. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை**

1. உலகில் நிதிசார்ந்த ஒத்துழைப்பு
2. உலகில் வறுமை ஒழிப்பு
3. நிதிநிலை, பன்னாட்டு வணிகம்
4. வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி.

**12. மாவோவின் நீண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக?**

1. 1934-ல் 1 லட்சம் பொதுவுடைமை இராணுவ வீரர்களுடன் மாவோ தொடங்கிய பயணம்
2. 20,000 போர்மட்டும் 6000 மைல்கள் கடந்து ஷேனிப் பகுதியை அடைந்தனர்.

**13. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?**

1. மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைக்க அமெரிக்கா பண உதவி அளித்தல்.

**14. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக?**

1. இரண்டு வல்லரசுகளிலும் (ரஷ்யா,அமெரிக்கா) சேராத நாடுகள்
2. ரஷ்யா வீழ்ச்சிக்குப்பின் இதன் முக்கியத்துவம் குறைந்தது.

**15. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக?**

1. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு, இரக்கம்
2. அனைத்து மக்களுக்கும் இலவச உணவு
3. திருவருட்பா (பாடல்களின் தொகுப்பு)

**16. ஐரோப்பிய போர் குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் யாவை?**

1. இங்கிலாந்து - ஆரவாரமான நாட்டுப்பற்று
2. பிரான்ஸ் - பேரினவாதம்
3. ஜெர்மனி - வெறிகொண்ட நாட்டுப்பற்று

**17. சமூக சீர்த்தங்களுக்கு மகாதேவ் ரானடேவின் பங்களிப்பை கூறுக?**

1. சாதி மறுப்பு திருமணம்
2. விதவை மறுமணம் (சங்கம்)
3. சமபந்தி
4. பெண்கள் முன்னேற்றம்

**18. சீன-ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக**

1. சீனாவை ஜப்பான் தோற்கடித்தது, ஐரோப்பிய சக்திகள் விரும்பவில்லை.
2. ஜப்பான் கிழக்கு ஆசியாவில் வலிமை பெற்றது.

**19. ஒட்டாவா உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் யாது?**

1. இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை
2. இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது
3. பெருமந்த விளைவு காலனி நாடுகள் மீது மாற்றுதல்

**20. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?**

1. வலிமையான சொற்பொழிவு
2. உணர்ச்சிமிக்க பேச்சு
3. ராணுவ புகழ் மிக்க காலத்திற்கு செல்வதாக கூறியது.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# 10-ம் வகுப்பு புவியியல் - இரண்டு மதிப்பெண்கள்

**1. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக?**
1. $82^0$ 30' கிழக்கு தீர்க்க ரேகையின் தலநேரம்
2. மிர்சாபூர் வழியாக செல்கிறது
3. கிரின் வீச்சை விட 5.30 மணி நேரம் முன்னர்

**2. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி கூறுக?**
1. இந்தியாவின் மேற்கில் உள்ளது.
2. முருகைப் பாறைகள்
3. தலைநகரம் - காவராத்தி
4. பரப்பளவு - 32 ச.கி.மீ.

**3. இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை?**
1. அட்சங்கள், 2. கடலிலிருந்து தொலைவு
3. நிலத்தோற்றம், 4. பருவக்காற்று, 5. ஜெட்காற்று

**4. பருவ மழை வெடிப்பு என்றால் என்ன?**
1. தெற்மேற்கு பருவக்காற்று இடி,மின்னலுடன் தொடங்குவது.
2. இந்திய வெப்பநிலையை குறைக்கும்

**5. இந்தியாவில் அதிக மழைபெறும் பகுதிகள் யாவை?**
1. அசாம், 2.திரிபுரா, 3.நாகலாந்து,
4. தெற்குமேகாலயா, 5.மேற்கு கடற்கரை

**6. வேளாண்மை வரையறுக்கவும்?**
1. குறிப்பிட்ட பயிரை உற்பத்தி செய்தல்
2. மக்கள் மற்றும் கால்நடைகளுக்கு உணவு வழங்குதல்.
3. நாட்டிற்கு 25% வருமானம், 50% வேலைவாய்ப்பு தருவது.

**7. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**
1. தகவல், எண்ணம், கருத்து பரிமாற்றம்
2. இருவகை -1.தனிமனித, 2.பொது

**8. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக்கூறுக.**
1. சீனா, 2.இலங்கை, 3.பாகிஸ்தான்,
4. ஆப்கானிஸ்தான், 5.நேபாளம், 6.பூடான்,
7. வங்காளதேசம், 8.மியான்மர்

**9. தக்காண பீடபூமி - சிறுகுறிப்பு வரைக?**
1. முக்கோண படிவம்,
2. தீபகற்ப பீடபூமியில் உள்ளது.
3. மேற்கிலிருந்து கிழக்காக சரிந்துள்ளது.

**10. ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?**
1. வளிமண்டல உயர் அடுக்கில் குறுகிய பகுதியில் வேகமாக நகரும் காற்றுகள்.
2. இவைதென்மேற்கு பருவக்காற்று, வெப்ப மண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

**11. இந்தியாவில் மேற்குநோக்கி பாயும் ஆறுகளைப் பற்றிக்கூறுக**
1. நர்மதை, 2.தபதி, 3.மாஹி, 4.சபர்மதி

**12. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?**
1. புவிப்பரப்பில் இருந்து உயரே செல்ல செல்ல வெப்ப நிலை குறைவது
2. 1000 மீட்டருக்கு $6.5^0C$ வெப்பநிலை குறையும் எனவே சமவெளியினை விட மலைப்பகுதி குளிராக உள்ளது.

**13. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளை பட்டியலிடுக?**
1. வண்டல், 2.கரிசல், 3.செம்மண், 4.களிமண்
5. சரளை, 6.பாலை, 7.மலைமண்,8. காரமண்

**14. கரிசல் மண்ணின் ஏதேனும்இரண்டு பண்புகளை எழுதுக?**
1. ஈரத்தில் சேறாக இருக்கும்
2. ஈரத்தை நீண்ட நேரம் தக்க வைக்கும்
3. பசால்ட் பாறைகளால் உருவானது.

**15. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக?**
1. தீவிர வேளாண்மை,
2.படிக்கட்டு வேளாண்மை
3. இடப்பெயர்வு வேளாண்மை,
4. தன்னிறைவு வேளாண்மை,
5. கலப்பு வேளாண்மை, 6.வறண்ட வேளாண்மை

**16. இந்திய வேளாண் பருவங்களை குறிப்பிடுக?**
1. காரிஃப் (ஜீன்-செப்)
2. ராபி (அக்-மார்ச்)
3. சையது (ஏப்-ஜீன்)

**17. இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக?**
1. உயரமான மலை சரிவுகளில் பயிரப்படுவது
2. (எ.கா) தேயிலை, காபி, இரப்பர், வாசனைப்பொருள்

**18. வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக?**
1. இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்தும், (எ.கா) நீர், மண், காற்று
2. வகைகள் : 1. புதுப்பிக்கஇயலும் வளங்கள்
2. புதுப்பிக்க இயலா வளங்கள்

**19. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?**
1. ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்டவை.
2. உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள்
3. வகைகள் : 1. உலோகம்
2. அலோகம்

**20. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகள் யாவை?**
1. மேற்குவங்கம் (ஹுக்ளி ஆற்றங்கரை)
2. ஆந்திரா, 3.பீகார், 4.அசாம், 5.ஒடிசா

**21. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளை குறிப்பிடுக?**
1. மும்பை ஹை, 2.குஜராத் கடற்கரை
3. திக்பாய், 4.பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு

**22. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**
1. ஒரு பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்வது.
2. வகைகள் : 1. உள்நாட்டு இடம்பெயர்வு
2. சர்வதேச இடம் பெயர்வு

**23. பன்னாட்டு வணிகம் - வரையறு?**
1. இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளிடையே நடைபெறும் வணிகம்.
2. இரு கூறுகள் - ஏற்றுமதி, இறக்குமதி
3. நீர்வழி, வான்வழி
4. அயல்நாட்டு பணம் பயன்பாடு

SAI K.THIRUKUMARAN GHSS-MGR Nagar Padasalai.Net

## 10-ம் வகுப்பு குடிமையியல் இரண்டு மதிப்பெண்கள்

**1. இந்தியாவின் செம்மொழிகள் எவை?**
1. தமிழ் (2004), 2. சமஸ்கிருதம் (2005)
3. தெலுங்கு (2008), 4.கன்னடம் (2008)
5. மலையாளம் (2013) 6.ஒடியா (2014)

**2. இந்தியக்குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்.**
1. ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால்
2. இவரின் பதவிக்காலம் - 5 ஆண்டுகள்

**3. உச்சநீதிமன்ற நீதிபதியாவதற்கு தகுதிகள் யாவை?**
1. இந்திய குடிமகன்
2. 5 ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதி
3. 10 ஆண்டுகள் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
4. சிறந்த சட்டவல்லுநர்

**4. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?**
1. மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்
2. முக்கிய வழக்குகளை நேரடியாக விசாரித்தல் (உயில், திருமணம், நீதிமன்ற அவமதிப்பு)

**5. அரசியலமைப்பு என்றால் என்ன?**
1. நாட்டு முன்னேற்றத்தின் அச்சாணி
2. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரத்தை கூறுவது
3. நாட்டின் நிர்வாகத்தை சார்ந்த கொள்கைகளை பிரதிபலிக்கும் சட்டம்.

**6. எத்தனை அடிப்படை உரிமைகள் உள்ளன?**
**ஆறு அடிப்படை உரிமைகள் உள்ளன.**
1. சமத்துவ, 2.சுதந்திர, 3.சுரண்டலுக்கெதிரான
4. சமயசார்பு, 5.கல்வி கலாச்சார
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு

**7. நீதிப்பேராணை என்றால் என்ன?**
1. நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை (அ) ஆணை
2. சில சட்டங்களை நிறைவேறாமல் தடுக்க நீதிமன்றத்தினால் வெளியிடப்படும் ஆணை

**8. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக?**
1. சட்டமன்ற உறவுகள்
2. நிர்வாக உறவுகள்
3. நிதி உறவுகள்

**9. நிதி மசோதா என்றால் என்ன?**
1. வருமானம் மற்றும் செலவு சார்ந்த மசோதா
2. புதிய வரிவிதிப்பு,குறைப்பு,நீக்கம் இதில் அடங்கும்.

**10. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?**
1. மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத்தலைவர்
2. மாநில நிர்வாகத்தின் எல்லா அதிகாரங்களும் பெற்றவர்.

**11. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு தகுதிகள் யாவை?**
1. 35 வயது நிரம்பிய, இந்தியக்குடிமகன்
2. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது.

## 10-ம் வகுப்பு பொருளியல் இரண்டு மதிப்பெண்கள்

**1. GDP இன் முக்கியத்துவத்தை எழுதுக.**
1. பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வுக்கு
2. பொருளாதார திட்டமிட
3. வாங்கும் திறன் மதிப்பிட
4. பணவீக்க, பணவாட்ட சிக்கல் தீர்க்க

**2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள் யாவை?**
1. உணவு கிடைத்தல்
2. உணவுக்காக அணுகல்
3. உணவினை உறிஞ்சுதல்

**3. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக.**
1. மதிய உணவுத்திட்டம் மற்றும் ICDS
2. Dr. MGR ஊட்டச்சத்து திட்டம்
3. பிரதமரின் கிராமோதயா திட்டம்
4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**4. நாட்டு வருமானம் வரையறுக்க**
ஒரு நாட்டில் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**5. தனிநபர் வருமானம் (அ) தலா வருமானம் என்றால் என்ன?**
1. நாட்டு வருமானத்தை மக்கள்தொகையால் வகுப்பதால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.
தனிநபர் வருமானம்
= நாட்டு வருமானம் / மக்கள் தொகை
2. இது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் கருவி

**6. உலகமயமாக்கல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை**
1. உலக பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பது.
2. வகைகள் : 1. தொன்மையான
2. இடைப்பட்ட
3. நவீன

**7. FAO -வின்படி உணவு பாதுகாப்பை வரையறு?**
எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணவு தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வது

**8. பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?**
1. உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு (அரிசி, கோதுமை)
2. முக்கிய தானிய பயிர்களின் விளைச்சல் அதிகரிப்பு
3. தானிய உற்பத்தியால் நிலப்பரப்பு அதிகரிப்பு

**9. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக**
1. நாட்டில் பண்டங்களை உற்பத்தி செய்யும் பெரு நிறுவனம்
2. நாட்டில் பணிகளை கட்டுப்படுத்தும் ஒரு பெரு நிறுவனம்

**10. உலக வர்த்தக அமைப்பின்நோக்கம் யாது?**
1. வணிகத்தினை கட்டுப்படுத்துதல்
2. அயல்நாட்டு வாணிபம்
3. வர்த்தக தகராறுகளை தீர்த்தல்
4. வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு பாதுகாப்பு

**11. உலகமயமாக்கலின் நேர்மையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக**
1. வாழ்க்கை தரம் அதிகரிப்பு
2. வேலைவாய்ப்பு அதிகரிப்பு
3. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு
4. வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிப்பு

**12. இந்தியாவில் பொருளாதார கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**
1. வேளாண்மை 2.தொழில்துறை,
3. புதிய பொருளாதார கொள்கை,
4. வர்த்தகம், 5.வேலை வாய்ப்பு,
6. கூலிக் கொள்கை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## 10-ம் வகுப்பு புவியியல்
## வேறுபடுத்துக

| | | |
|---|---|---|
| **1.** | **மேற்கு கடற்கரை சமவெளி** | **கிழக்கு கடற்கரை சமவெளி** |
| 1. | மேற்கில் உள்ளது | கிழக்கில் உள்ளது |
| 2. | குறுகலானது | நீண்ட சமவெளி |
| 3. | வேம்பநாடு முக்கிய ஏரி | சிலிக்கா முக்கிய ஏரி |
| **2.** | **மேற்கு தொடர்ச்சி மலை** | **கிழக்கு தொடர்ச்சி மலை** |
| 1. | மேற்கில் உள்ளது | கிழக்கில் உள்ளது |
| 2. | தொடர்ச்சியானவை | தொடர்ச்சியற்றவை |
| 3. | ஆனைமுடி உயரமான சிகரம் | மகேந்திரகிரி உயரமான சிகரம் |
| **3.** | **வானிலை** | **கால நிலை** |
| 1. | தினமும் மாறும் | மாறாதது |
| 2. | இடத்திற்கு இடம் மாறும் | மாறுபாடு இருக்காது |
| 3. | படிப்பு-வானிலையியல் | படிப்பு-காலநிலையியல் |
| **4.** | **கடல் மீன் பிடிப்பு** | **உள்நாட்டு மீன்பிடிப்பு** |
| 1. | கடற்கரை, ஆழ்கடல் மீன்பிடிப்பு | ஆறு,ஏரி,குளம்,மீன்பிடிப்பு |
| 2. | உவர்ப்பு நீரில் நடைபெறும் | நன்னீரில் நடைபெறும் |
| 3. | கேரளா முதலிடம் | ஆந்திரா முதலிடம் |
| **5.** | **வண்டல் மண்** | **கரிசல் மண்** |
| 1. | வெளிர் நிறம் | கருப்பு நிறம் |
| 2. | நெல், கோதுமை | பருத்தி, புகையிலை |
| 3. | எண்ணெய் வித்துக்கள் வளரும் | திணை வகைகள் வளரும் |
| **6.** | **வேளாண்சார்ந்த தொழிலகங்கள்** | **கனிமம் சார்ந்த தொழிலகங்கள்** |
| 1. | வேளாண்பொருட்கள் மூலப்பொருட்கள் | கனிம பொருட்கள் மூலப்பொருட்கள் |
| 2. | தொழிலாளர்கள் சார்ந்தது | இயந்திரங்களை சார்ந்தது |
| 3. | கரும்பு,பருத்தி,சணல் ஆலைகள் | இரும்பு, எஃகு ஆலைகள் |
| **7.** | **சாலை வழி போக்குவரத்து** | **இரயில் வழி போக்குவரத்து** |
| 1. | சாலை வழி பயணம் | இருப்புப்பாதை பயணம் |
| 2. | குறுகிய தூரப்பயணம் | நீண்ட தூர பயணம் |
| 3. | கிராமங்களை இணைக்கும் | நகரங்களை இணைக்கும் |
| **8.** | **வடகிழக்கு பருவக்காற்று** | **தென்மேற்கு பருவக்காற்று** |
| 1. | தென்இந்தியாவில் மழை | வடஇந்தியாவில் மழை |
| 2. | அக்டோபர் - டிசம்பர் | ஜுன் - செப்டம்பர் |
| 3. | குறைந்த மழைப்பொழிவு | அதிக மழைப்பொழிவு |
| **9.** | **புதுபிக்கஇயலும் வளங்கள்** | **புதுபிக்க இயலா வளங்கள்** |
| 1. | புதுப்பிக்க இயலும் | புதுப்பிக்க இயலாது |
| 2. | சுற்றுச்சூழல் பாதிக்காது | சுற்றுச்சூழலை பாதிக்கும் |
| 3. | சூரியன், காற்று, நீர் | நிலக்கரி, பெட்ரோல்,இயற்கை வாயு |
| **10.** | **உலோக கனிமங்கள்** | **அலோக கனிமங்கள்** |
| 1. | உலோக தன்மை உண்டு | உலோக தன்மை இல்லை |
| 2. | தங்கம், தாமிரம், நிக்கல் | மைக்கா, ஜிப்சம், நிலக்கரி |
| 3. | மதிப்பு மிக்கவை | செயற்கையாக கிடைப்பவை |
| **11.** | **மரபுசார் எரிசக்தி** | **மரபுசாரா எரிசக்தி** |
| 1. | புதுப்பிக்க இயலும் | புதுப்பிக்கஇயலாது |
| 2. | சுற்றுச்சூழலை மாசுபடுத்தாது | சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் |
| 3. | சூரியன், காற்று, நீர் சக்தி | அனல், அணு மின்சக்தி |
| **12.** | **அச்சு ஊடகம்** | **மின்னணு ஊடகம்** |
| 1. | அச்சிடப்பட்ட ஆதாரங்கள் | மின்னணு ஆதாரங்கள் |
| 2. | செய்தித்தாள், வார, மாத இதழ்கள் | தொலைக்காட்சி, இணையம், கைப்பேசி |
| **13.** | **இமயமலை ஆறுகள்** | **தீபகற்ப ஆறுகள்** |
| 1. | இமயமலையில் உற்பத்தியாகிறது. | மேற்குதொடர்ச்சிமலையில் உற்பத்தியாகிறது |
| 2. | வடஇந்தியாவில்பாய்கிறது | தென்இந்தியாவில் பாய்கிறது |

## 10-ம் வகுப்பு புவியியல்
## காரணம் கூறுக

| | |
|---|---|
| **1.** | **இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன**<br>புவிமேலோட்டு பேரியக்க விசையின் காரணமாக புவிமேலோடு மடிக்கப்பட்டு மடிப்புமலைகள் உருவாகின்றன. |
| **2.** | **வேளாண்மை (விவசாயம்) இந்தியாவின் முதுகெலும்பு**<br>நாட்டின் 50% வேலைவாய்ப்பும், 25% வருமானமும் தருவதால் இது இந்தியாவின் முதுகெலும்பு |
| **3.** | **மழை நீர் சேமிப்பு அவசியம்**<br>1. நிலத்தடி நீர்மட்டம் உயர்த்தவும்<br>2. விவசாயம், குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யவும் |
| **4.** | **மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானது**<br>உயரே செல்லச் செல்ல வளிமண்டல வெப்பம் குறைவதால் |
| **5.** | **வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்**<br>இமயமலை பனி ஆறுகளில் உருவாவதாலும், கோடையில் பனி ஆறுகள் உருகுவதாலும் |
| **6.** | **மேற்குகடற்கரை சமவெளி குறுகலானது**<br>இச்சமவெளியில் பாயும் ஆறுகள் டெல்டாக்களை உருவாக்குவதில்லை |
| **7.** | **இந்தியா அயன மண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது.**<br>1. இந்தியாஅயன மண்டல பகுதியில் அமைந்துள்ளது.<br>2. கால நிலையை பருவக்காற்றுகள் நிர்ணயிக்கின்றன |
| **8.** | **தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கி பாயும் நதிகள்**<br>தென்னிந்தியாவின் நிலஅமைப்பு மேற்கில் உயரமாகவும், தெற்கில் பள்ளமாகவும் இருப்பதால் |
| **9.** | **மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் டெல்டாவை உருவாக்குவதில்லை**<br>மேற்குநோக்கிப்பாயும் நதிகள் மிக குறுகிய தூரமே ஓடி கடலில் கலப்பதால். |

# 10-ம் வகுப்பு வரலாறு
# 5 மதிப்பெண் வினா-விடைகள்

**1. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவரி.**

1. ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கை, எதிரணி சேர்க்கை. (மூவர் உடன்படிக்கை), (மூவர் கூட்டு நாடுகள்)
2. வன்முறை சார்ந்த தேசியம் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, தேசபற்றின் வளர்ச்சி
3. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை ஜெர்மனியும், இங்கிலாந்தும் கப்பற்படையை விரிவுபடுத்தி போட்டியில் இறங்கியது
4. பிரான்சு - ஜெர்மனி பகை
5. பால்கன் பகுதியில் ஆஸ்திரியா-செர்பியா இடையேயான பகை
6. முதல், இரண்டாம் பால்கன் போரில் துருக்கி மற்றும் பல்கேரியா தோற்றது
7. உடனடிக்காரணம் ஆஸ்திரிய இளவரசர் பெர்டினானட் படுகொலை

**2. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.**

1. அடிப்படையிலான பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது.
2. உலகம் இரு வல்லரசு அணியாக பிரிதல் :
   1) உலகம் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் தலைமையில் இரு அணியாக பிரிந்தது.
   2) கம்யூனிசம், கம்யூனிசம் அல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாக பிரிந்தது.
3. அணு ஆயுதப் பரவல் அதிகரிப்பு : இரு வல்லரசு நாடுகளும் உலகில் பல நாடுகளும் அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்தன.
4. இராணுவச் செலவுகள் அதிகரிப்பு : பலநாடுகளில் இராணுவச் செலவுகள் உச்சத்தை எட்டின.
5. பன்னாட்டு முகமைகள் உருவாக்கம் ; ஐ.நா.சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம் ஆகியவை உருவானது.
6. காலனிகளுக்கு விடுதலை சூழல் : காலனி நீக்க செயல்பாட்டால் காலனி ஆதிக்க சக்திகள் தங்கள் காலனிகளுக்கு விடுதலை வழங்கும் சூழல் ஏற்பட்டது.

**3. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க**

**அமைப்பு :**

1. சமமான வாக்குகளுடன் 193 உறுப்பு நாடுகள்
2. தலைமையகம் - நியூயார்க்
3. பொது சபை : ஆண்டுக்கு ஒரு முறை கூடி விவாதிக்கும் அனைத்து நாடுகளின் சபை
4. பாதுகாப்பு அவை : வீட்டோ அதிகாரம் கொண்ட முக்கிய அம்சங்களை விவாதிக்கும் அவை ( 5 நிரந்தர, 10 தற்காலிக நாடுகள் உள்ளன)
5. நிர்வாக அமைப்பு : ஐ.நாவின் செயல்பாட்டு அங்கம் செயலகம்
6. பன்னாட்டு நீதிமன்றம் : ஐநாவின் நீதி நிர்வாக அமைப்பு
7. பொருளாதார மற்றும் சமூக மன்றம் : பொருளாதார மற்றும் சமூக பணிகளை ஒருங்கிணைப்பது.
8. முக்கிய துணை அம்சங்கள் FAO, WHO, UNESCO, UNICEF, UNDP,

செயல்பாடுகள் :

1. உலக சூழலுக்கு ஏற்ப செயல்பாடுகளில் மாற்றம்
2. 1960-ல் காலனி ஆதிக்க நீக்கம்
3. தன் அமைதிப்படை மூலம் உலகில் அமைதி காத்தல்
4. மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை கவனித்தல்
5. பருவ கால மாற்றங்கள், பாலின சமத்துவம் கவனித்தல்

**4. பெண்களின் மேம்பாட்டிற்கு 10-ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து கட்டுரை வரைக :**

**19-ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் :**

1. இராஜாராம்மோகன் ராய் :
   1) உடன்கட்டை ஏறுதல் (சதி) குழந்தை திருமணம், பலதார மணம் ஒழிப்பு.
   2) விதவை மறுமணம், பெண் கல்வி ஊக்குவிப்பு
2. ஈஸ்வர சந்திர வித்யா சாகர் :
   1) பெண்கல்விக்காக பெண்கள் பள்ளிகள்
   2) விதவை மறுமணச்சட்டம்
3. மகாதேவ் கோவிந்த் ரானடே : சாதிமறுப்பு திருமணம், விதவை மறுமணம், பெண்கள் முன்னேற்றம்
4. சுவாமி தயானந்த சரஸ்வதி : குழந்தை திருமண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு
5. ஜோதிபா பூலே : குழந்தை திருமண எதிர்ப்பு, விதவை மறுமண ஆதரவு, விதவைகள் காப்பகம், ஒடுக்கப்பட்ட பெண்களின் முன்னேற்றம்

**5. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டு காட்டுக :**

1. ஜெர்மனி இழப்பீட்டுத்தொகை வழங்க வேண்டும்
2. ஜெர்மனி படை சுருக்கப்பட்டு,சிறிய கப்பற்படை வைக்க அனுமதி.
3. ஆஸ்திரிய-ஜெர்மனி ஒருங்கிணைப்புக்கு தடை
4. ஜெர்மனியின் காலனி நாடுகளின் உரிமையை நேச நாடுகள் பெற்றன.
5. ஜெர்மனியின்அல்சேஸ், லொரைன் பகுதிகள் பிரான்சிடம் ஒப்படைப்பு.
6. ஜெர்மனியின் டான்சிக் துறைமுகம் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைப்பு.
7. ஆஸ்திரிய சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரித்தல்.

**6. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா.சே துங்கின் பங்களிப்பினை அளவிடுக :**

1. 1911-ம்ஆண்டு புரட்சியில் தன்பொதுவுடைமை அரசியல் வாழ்வை துவங்கினார்.
2. 1933-ல் கட்சியின் முழுகட்டுப்பாடு
3. 1934-ல் பொதுவுடைமை இராணுவத்தினருடன் நீண்ட பயணம்
4. 1937-ல் ஒரு கோடி மக்களின் தலைவர்
5. தொழிலாளர்கள்,விவசாயிகள் தன்பக்கம் ஈர்த்தார்
6. 1948-ல் நடுவன் ஆட்சிக்குழு தலைவர்
7. சீனாவை 5 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# 10-ம் வகுப்பு வரலாறு
## 5 மதிப்பெண் வினா-விடைகள் தொடர்ச்சி

**7. இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினை திறனாய்வு செய்க.**

**இராமகிருஷ்ணரின் தொண்டு :**

1. மதங்களை பின்பற்றி வீடு பேறு அடைதல்
2. ஜீவன் என்பதே சிவன்
3. மனித சேவையே கடவுள் சேவை
4. உயிர்கள் மேல் சேவை
5. கல்விபெற்ற இளைஞர்களை தன்பால் ஈர்த்தல்
6. இராமகிருஷ்ண மிஷன் மூலம் மக்களுக்கு கல்வியறிவு, மருத்துவ உதவி, பேரிடர் நிவாரண பணிகள் வழங்கினார்.

**சுவாமி விவேகானந்தர் தொண்டு :**

1. மனித குலத்திற்கு தொண்டுசெய்தல்
2. பண்பாட்டு தேசியத்திற்கு முக்கியத்துவம்
3. இந்து சமூகம் புத்துயிர்பெற இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல்
4. சமய சடங்குகளில் ஒடுக்கப்பட்டோர் அனுமதி
5. வங்காள இளைஞர்களிடம் அரசியல் மாற்றம்

**8. பன்னாட்டு (சர்வதேச) சங்கத்தின் பணிகளை மதிப்பீடுக, அதன் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக :**

1. 1920 – ஆலேண்டு தீவுகள் பிரச்சினைக்குதீர்வு
2. 1921–போலந்து–ஜெர்மனி எல்லை பிரச்சினை தீர்வு
3. 1925–கிரிஸ்–பல்கேரியா போர் நிறுத்தம்
4. 1925–லொகர்னோ உடன்படிக்கை
5. மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பர அமைதி

**தோல்விக்கான காரணங்கள் :**

1. வெற்றிபெற்ற நாடுகளின் அரசியல் மையமானது
2. சங்கத்திற்கென இராணுவம் இல்லை
3. கூட்டு பாதுகாப்பு கோட்பாடுசெயல்படவில்லை
4. சர்வாதிகார நாடுகள் சுதந்திரமாக செயல்பட்டன
5. இங்கிலாந்து, பிரான்ஸ் மட்டும்உறுதியாக செயல்பட்டது.

**9. 19-ம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்?**

1. இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களால் கவரப்பட்டனர்.
2. நடுத்தர வகுப்பினரின் மேற்கத்திய கருத்துக்கள், சிந்தனைகள்.
3. இந்திய, மேற்கத்திய பண்பாடு இணைப்பு முயற்சி
4. சீர்திருத்த வாதிகளின் கருத்துக்கள் சமூக தீமைகளை கட்டுப்படுத்தின.
5. சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி நாட்டின் பழம்பெரும் கலாச்சாரத்தை மீட்க விரும்பின.

SAI K.THIRUKUMARAN GHSS-MGR Nagar Ch-78 Padasalai.Net



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



# 10-ம் வகுப்பு புவியியல்
# 5 மதிப்பெண் வினா-விடைகள்

**1. இமயமலையின் (வடக்கு மலைகளின்) உட்பிரிவுகளையும், அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி :**

**மூன்று உட்பிரிவுகள் :**

**1. மேற்கு இமயமலைகள் (டிரான்ஸ்)**
1) ஜம்மு-காஷ்மீர்-திபெத் பீடபூமியில் உள்ளது.
2) லடாக், காரகோரம், கைலாஷ் மலைத்தொடர்கள்

**2. மத்திய இமயமலைகள் (மூன்று பிரிவுகள்) :**
1) பெரிய (அ) இமாத்ரி
வடக்கு பகுதி, குறைந்த மழை,
உயர்ந்த சிகரங்கள்
2) சிறிய (அ) இமாச்சல்,
மத்திய மலைத்தொடர்,
புகழ்பெற்ற கோடை வாழிடங்கள்.
3) வெளி (அ) சிவாலிக்
ஒரு பகுதி ஆறுகளால் உருவான படிவு,
கிழக்கு டுயர்ஸ், மேற்கு டூன்கள்

**3. கிழக்கு இமயமலைகள் (பூர்வாஞ்சல்) :**
1) இமயமலையின் கிழக்கு கிளை
2) வடகிழக்கு மாநிலங்களில் உள்ளன

**இமயமலையின் முக்கியத்துவம் :**
1) இந்தியாவிற்கு இயற்கை அரண்.
2) வற்றாத நதிகளின் பிறப்பிடம்
3) சுற்றுலாத்தளம்
4) பல்லுயிர் மண்டலம்
5) கோடை வாழிடம், புனித தளங்கள்
6) வட இந்தியாவிற்கு கனமழை

**2. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக**
1. இந்திய கால நிலையின் முக்கிய அம்சம்
2. எல்நினோ நிகழ்வு மிகப்பெரிய தாக்கம்
3. ஜுன் முதல் வாரம் தென் இந்தியா, பிறகு இந்தியா முழுவதும்
4. இதன் இடி, மின்னலுடன் கூடிய துவக்கம் பருவமழை வெடிப்பு
5. தென் முனையை அடையும் போது இரு கிளையாகிறது.

**1) அரபிக்கடல் கிளை**
1) மேற்குதொடர்ச்சி மலையில் அதிகமழை
2) வடஇந்தியா முழுவதும் கனமழை
3) இராஜஸ்தான், வடமேற்கில்மழை இல்லை

**2. வங்காள விரிகுடா கிளை**
1) மேகாலயாவில்(மௌசின்ராம்) கனமழை
2) நாட்டின் மழைபொழிவில் 75% தருகிறது
3) தமிழ்நாடு குறைந்த மழை

**3. இந்திய மண்வகைகள் எவையேனும் ஐந்தினை குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி :**

**1. வண்டல் மண்**
1) வெளிர் நிறம்
2) கங்கை, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குகள்

**2. கரிசல் மண்**
1) ஈரமான சேராகும்
2) மஹாராஷ்ட்டிரா, மாளவ பீடபூமி

**3. செம்மண்**
1) படிகபாறை சிதைவு
2) தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா

**4. பாலைமண்**
1) குறைந்த ஈரம், வெளிர்நிறம்
2) இராஜஸ்தான், தெற்கு பஞ்சாப்

**5. களிமண்**
1) அதிக ஈரம், கருமை நிறம்
2) தமிழ்நாடு, ஒடிசா, பீகார்

**4. நகரமயமாக்கள் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக :**

**நகரமயமாக்கள்**

கிராமப்புற சமுதாயம், நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதே நகரமயமாக்கல் என்கிறோம்.

**நகரமயமாக்களின் தாக்கங்கள்**
1) நகர விரிவாக்கம்
2) மக்கள் நெருக்கடி
3) குடிநீர் பற்றாக்குறை
4) வடிகால் பிரச்சினை
5) குடியிருப்பு பற்றாக்குறை
6) போக்குவரத்து நெரிசல்
7) குடிசைப்பகுதிகள் தோற்றம்
8) திடக்கழிவு மேலாண்மை சிக்கல்

**5. பல்நோக்குத்திட்டம் என்றால் என்ன? ஏதேனும்இரண்டு பல்நோக்குதிட்டங்கள் பற்றி எழுதுக**

**பல்நோக்கு திட்டம்**
1) அறிவியல் முறையிலான நீர்மேலாண்மை திட்டம்
2) ஆற்றின் குறுக்கே பல நோக்கங்களுக்காக அணைகளை கட்டுதல்
3) நீர் மின் சக்தி, பாசனம் முக்கியநோக்கமாகும்

**4 பக்ரா நங்கல் திட்டம்**
1) சட்லஜ் நதியின் குறுக்கே உள்ள அணை
2) பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் பயன்பெறுகிறது.
3) 1500 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி

**5 ஹிராகுட் திட்டம்**
1) மகாநதி குறுக்கே கட்டப்பட்ட அணை
2) ஒடிசா பயன்பெறுகிறது
3) 347.5 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி

**6. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி :**

**நெல் :**
1) அயன மண்டலப் பயிர்
2) $24^0$C வெப்பம்
3) வண்டல் மண் பயிர்
4) 150 செ.மீ.மழை
5) பயிரிட அதிக தொழிலாளர்கள் தேவை

**கோதுமை :**
1) பஞ்சாப், ஹரியானாவில் அதிக உற்பத்தி
2) வெப்பம்,
விதைக்கும் போது - 10 to $15^0$C
அறுவடையின் போது - 20 to $25^0$C
3) செம்மண், கரிசல் மண் பயிர்
4) இரண்டாவது முக்கிய உணவு பயிர்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# 10-ம் வகுப்பு குடிமையியல்
# 5 மதிப்பெண் வினா-விடைகள்

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக :**
1. உலகில் எழுதப்பட்ட நீண்ட அரசியலமைப்பு
2. நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது
3. கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது
4. இந்தியாவை சமயசார்பற்ற நாடாக்குகிறது
5. சுதந்திரமான நீதித்துறையை ஏற்படுத்துகிறது
6. ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது
7. 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை
8. பல கருத்துக்கள் பல நாடுகளிடமிருந்து பெறப்பட்டன

**2. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?**

**1. அமைச்சரவை தொடர்பானவை**
அமைச்சர்களை நியமித்தல், துறை ஒதுக்குதல், அமைச்சரவை கூட்டம் நடத்துதல்

**2. ஆளுநர் தொடர்பானவை**
ஆளுநர்-அமைச்சரவை இடையே செய்தி தொடர்பாளர், முக்கிய அதிகாரிகள் நியமனத்தில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்

**3. சட்டமன்றம் தொடர்பானவை**
அரசின் கொள்கைகள், மசோதாக்கள்அறிமுகம், சட்டமன்றத்தை கலைக்க ஆளுநருக்கு பரிந்துரை

**4. இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்**
தனது கட்சியின் கட்டுப்பாடு, ஒழுக்கம் மேம்படுத்துதல், மக்கள் தேவைகளை நிறைவேற்றுதல்

**5. மத்திய அரசுடன் சுமூக உறவு**

**3. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?**
1. அமைச்சர்களுக்கு அரசின் துறையை ஒதுக்குதல்
2. அமைச்சரவைக்கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சிக்குறித்த முடிவு.
3. அமைச்சரவைத் தலைவராக பிற அமைச்சர்களுடன் பணி.
4. பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடல்

**கடமைகள்**
1. அமைச்சரவையின் முடிவுகளை குடியரசு தலைவருடன் விவாதித்தல்.
2. குடியரசுத்தலைவருக்கும், அமைச்சரவைக்கும் பாலமாக செயல்படுதல்.
3. நாட்டின் தலைவராகவும், செய்தித்தொடர்பாளராகவும் செயல்படுதல்.
4. சர்வதேச மாநாடுகளில் பங்குபெறுதல்

**4. ஆளுநரின் சட்டமன்ற(பல்வேறு) அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி :**

**1. நிர்வாக அதிகாரம்**
மாநில அரசின் தலைவர், முதல்வர், துணைவேந்தர், தலைமை தேர்தல் ஆணையர் நியமனம்.

**2. சட்டமன்ற அதிகாரம்**
1) சட்டமன்ற கூட்டம் கலைக்க
2) மசோதாவில் கையொப்பம்
3) அவசர சட்டம் பிறப்பித்தல்

**3. நிதி அதிகாரம்**
நிதி ஒதுக்கீடு, நிதிக்குழு நியமனம்

**4. நீதி அதிகாரம்**
அட்டார்னி ஜெனரல், மாவட்ட நீதிபதிகள் நியமனம்,

**5. சட்ட மசோதா நிறுத்துதல், குடியரசுத்தலைவர் ஆட்சிக்கு பரிந்துரை**

**6. மாநில அரசை கலைக்க குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை**

**5. இந்தியக்குடியரசுத்தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி :**
1. நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை துவங்குதல்.
2. ஆண்டுக்கு இருமுறை நாடாளுமன்றத்தை கூட்டுகிறார்.
3. இவரின் ஒப்புதலுக்கு பின்னரே மசோதாக்கல் சட்டமாகிறது.
4. மக்களவைக்கு 12 உறுப்பினரகள் நியமனம்

**நீதிமன்ற அதிகாரங்கள் :**
1. சட்டப்பிரிவு 72-வது மூலம் நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் அதிகாரம் உண்டு.
2. தன் அதிகாரத்தை எந்த நீதிமன்றமும் கட்டுப்படுத்தாது.

**6. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக :**
1. சட்டப்பகுதி-3, சட்டப்பிரிவு 12-35 வரை அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகிறது
2. முதலில் 7-உரிமைகள் தற்போது 6 உரிமைகள்
3. இது இந்தியாவின் மகாசாசனம்
4. ஆறு உரிமைகள்.
   1. சமத்துவ உரிமை (பிரிவு 14-18)
   2. சுதந்திர உரிமை (பிரிவு 19-22)
   3. சுரண்டலுக்கு எதிரான உரிமை (பிரிவு 23,24)
   4. சமயசார்பு உரிமை (பிரிவு 25-28)
   5. கல்வி, கலாச்சார உரிமை (பிரிவு 29-30)
   6. அரசியலமைப்புக்குஉட்பட்டு தீர்வுகாணும் உரிமை (பிரிவு - 32)

SAI K.THIRUKUMARAN GHSS-MGR Nagar padasalai.net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# 10-ம் வகுப்பு பொருளியல்
## 5 மதிப்பெண் வினா-விடைகள்

**1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி :**

**1. மொத்த நாட்டு உற்பத்தி :**
நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி :**
ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு

**3. நிகர நாட்டு உற்பத்தி :**
மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம்

**4. நிகர உள்நாட்டு உற்பத்தி :**
மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்

**5. தனிநபர் வருமானம் :**
= நாட்டு வருமானம் / மக்கள் தொகை

**6. தனிப்பட்ட வருமானம் :**

**7. செலவிட தகுதியான வருமானம்**

**2. 1. GDP-யை கணக்கிடும் முறைகள் யாவை? அவற்றை விவரி.**

1. செலவின முறை
ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிபண்ட பணிகளுக்கு செய்யும் செலவின் கூட்டுத்தொகை
செலவின முறை Y=C+I+G+(S-M)
2. வருமான முறை
பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமான கணக்கு
வருமானம் = கூலி+வாரம்+வட்டி+லாபம்
3. மதிப்பு கூட்டு முறை
இடைநிலை பண்டத்தின் மதிப்பு = இறுதி பண்டத்தின் மதிப்பு

**3. 1. உலக மயமாக்கலின் சவால்களை எழுதுக.**

1. உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
2. உலகளாவிய போட்டி
3. உலகில் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுத்தும்
4. உலகில் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும்
5. துரித உணவால் உடல்நலக்குறைவு, நோய்
6. குழந்தை தொழிலாளர், அடிமைத்தனம் அதிகரிப்பு
7. ஊதியங்கள், வேலைவாய்ப்புகள் அடிமட்டத்திற்கு செல்வது

**4. இந்தியாவின் GDP-ல் பல்வேறு துறைகளினி பங்கினை விவரி.**

**1. முதன்மை துறை (வேளாண் துறை)**
1) பங்களிப்பு - 15.87%
2) வேளாண்பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது பெரிய நாடு.
3) விவசாயம், மீன்பிடித்தல்

**2. இரண்டாவது துறை (தொழில்துறை)**
1) பங்களிப்பு - 29.75%
2) தொழில்துறையில் உலகில் 8-வது இடம்
3) எரிவாயு, ஜவுளி, சிமெண்ட், மின்சாரம்

**3. மூன்றாவது துறை (பணிகள் துறை)**
1) பங்களிப்பு - 54.40%
2) பணிகள் துறையில் உலகில் ஆறாவது இடம்
3) வங்கி, வர்த்தகம், கல்வி, சுகாதாரம், தகவல் தொடர்பு

**5. புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய குறிக்கோள்கள் யாவை.**

1. உள்ளீடுகளின் (விதைகள், உரங்கள்) உற்பத்தி திறனை உயர்த்துதல்.
2. ஒவ்வொரு ஹெக்டேர் நிலத்திற்கும் உற்பத்தி அதிகரிப்பு.
3. ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலன்களுக்காக
   1). கடன் ஆதரவு
   2) நிலச் சீர்திருத்தம்
   3) இடைத்தரகர்கள் ஒழிப்பு
4. விவசாய துறையில் நவீன தொழில் நுட்பம்
5. இந்திய விவசாயத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிசெய்தல்.
6. கூட்டுறவு சங்கங்களின் தடையை நீக்குதல்
7. சுய உதவி நிறுவனங்களின் அதிகார தடையை நீக்குதல்.

**6. MNC பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.**

**MNC நன்மைகள்**
1. குறைந்த விலையில் தரமான உற்பத்தி
2. பரிவர்த்தனை செலவு இல்லை
3. வரிமாறுபாடு
4. உள்ளூர் பொருளாதார வேலைவாய்ப்பு

**MNC தீமைகள்**
1. முற்றுரிமை வளரும்
2. சுற்றுச் சூழல் தீங்கு
3. உள்ளூர் வணிக வீழ்ச்சி

**7. பொது விநியோக முறையை விவரிக்கவும்.**

1. மக்களின் சமமற்ற நிலை, பொருளாதார வறுமையை போக்க பொது வழங்கல் முறையை அரசு ஏற்படுத்தியது.
2. மாநிலத்திற்கு மாநிலம் இதன் நோக்கம், செயல்பாடு மாறும்.
3. உலகளாவிய பொது வழங்கல் முறை குடும்ப கார்டு பெற்றவர்களுக்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன.
4. சில அளவுகோலின் அடிப்படையில் சிலருக்கு மட்டும் பொருட்கள் வழங்கப்படுகின்றன.
5. இவற்றிக்கு மத்திய,மாநில அரசு மான்யம் தருகிறது
6. இம்முறை மூலம் தமிழ்நாடு அனைத்து கார்டுகளுக்கும் இலவச அரிசி வழங்குகிறது.

SAI K.THIRUKUMARAN GHSS MGR Nagar Padasalai.Net



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## 10-ம் வகுப்பு வரைபடம்
## வரலாறு உலகம்

| 1. | 2. |
|---|---|
| 1. இங்கிலாந்து, 2. ரஷ்யா<br>3. பிரான்ஸ்,4.ஜப்பான்<br>5. இத்தாலி | 1. ஜெர்மனி 2. கிரீஸ்<br>3. சீனா, 4. இந்தியா<br>5. பசிபிக் பெருங்கடல் |

| 3. | 4. |
|---|---|
| 1. ஆஸ்திரியா-ஹங்கேரி<br>2. அமெரிக்கா, 3. போலந்து<br>4. பல்கேரியா, 5.துருக்கி | 1. மொராக்கோ, 2.செர்பியா<br>3. ஹவாய் தீவு<br>4.ஆஸ்திரேலியா, 5.நியூசிலாந்து |

| 5. | 6. |
|---|---|
| 1. ருமேனியா, 2.கனடா<br>3. ஹிரோஷிமா,4.நாகசாசி,<br>5. பிரேசில் | |

### வரைபடம் - புவியியல் - இந்தியா

| 1. | 2. |
|---|---|
| 1. கங்கை ஆறு (சமவெளி,டெல்டா) | 1.காரக்கோரம் மலைத்தொடர் |
| 2. தக்காண பீடபூமி | 2.மேற்கு தொடர்ச்சிமலை |
| 3. வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை | 3.அரபிக்கடல் |
| 4. இரும்புத்தாது கிடைக்குமிடம் | 4.கட்ச் வளைகுடா |
| 5. வண்டல் மண் காணப்படும்பகுதி | 5.ஆரவல்லி மலைத்தொடர் |
| 6. மும்பை | 6.கரிசல்மண் |
| 7. ஹீராகுட் அணை | 7.காவிரி ஆறு (டெல்டா) |
| 8. மக்களடர்த்தி மிகுந்த மாநிலம் | 8.தேயிலை விளையும்பகுதி |

| 3. | 4. |
|---|---|
| 1. தென்மேற்குபருவக்காற்றுவீசும் திசை | 1.கிழக்குதொடர்ச்சிமலை |
| 2. மாங்குரோவ்காடுகள் | 2.சோட்டா நாகபுரி பீடபூமி |
| 3. சென்னை | 3.இலட்சத்தீவு தொடர் |
| 4. பருத்திவிளையும் பூமி | 4.மலபார் கடற்கரை |
| 5. சேலம் | 5.அசாம் |
| 6. அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் | 6.மன்னார் வளைகுடா |
| 7. விசாகப்பட்டினம் | 7.பாமீர் முடிச்சு |
| 8. மேட்டூர்அணை | 8.நெல்விளையும் பகுதி |

| 5. | 6. |
|---|---|
| 1. வங்காள விரிகுடா | 1.அந்தமான் நிக்கோபர் தீவுகள் |
| 2. தார் பாலைவனம் | 2.மும்பை ஹை |
| 3. தூத்துக்குடி துறைமுகம் | 3.நிலக்கரி கிடைக்குமிடம் |
| 4. சணல் விளையும் பகுதி | 4.சுந்தரவனம் |
| 5. K 2 சிகரம் | 5.கிழக்கு கடற்கரை சமவெளி |
| 6. பாக் நீர்சந்தி | 6.சிலிக்கா ஏரி |
| 7. சோழமண்டல கடற்கரை | 7.கோதுமை விளையும் பகுதி |
| 8. அதிக மழை பெறும் பகுதி | 8.சென்னை-கொல்கத்தா ரயில்பாதை |

| 7. | 8. |
|---|---|
| 1. எவரெஸ்ட் சிகரம் | |
| 2. காம்பே வளைகுடா | |
| 3. கொச்சி | |
| 4. மேற்கு கடற்கரை சமவெளி | |
| 5. நர்மதை ஆறு | |
| 6. பன்னா உயிர்கோளபெட்டகம் | |
| 7. மலைக்காடுகள் | |
| 8. பாலை மண் | |

## வரலாறு காலக்கோடு

### காலக் கோடு - உலக நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1. | 1914 | - முதல் உலகப்போர் ஆரம்பம் |
| 2. | 1917 | - ரஷ்ய புரட்சி |
| 3. | 1918 | - முதல் உலகப்போர் முடிவு |
| 4. | 1919 | - வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை |
| 5. | 1920 | - பன்னாட்டு சங்கம் ஆரம்பம் |
| 6. | 1922 | - முசோலினியின் ரோம் அணிவகுப்பு |
| 7. | 1929 | - பொருளாதார பெருமந்தம் |
| 8. | 1934 | - மாவோ நீண்ட பயணம் |
| 9. | 1939 | - இரண்டாம் உலகப்போர் ஆரம்பம் |
| 10. | 1940 | - பிரிட்டன் போர் |
| 11. | 1945 | - இரண்டாம் உலகப்போர் முடிவு |
| 12. | 1949 | - நேட்டோ |
| 13. | 1954 | - சீட்டோ |
| 14. | 1955 | - வார்சா ஒப்பந்தம் |

### காலக் கோடு - இந்திய நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1. | 1905 | - சுதேசி இயக்கம் |
| 2. | 1916 | - தன்னாட்சி இயக்கம் |
| 3. | 1917 | - சம்பரான் சத்தியாகிரகம் |
| 4. | 1918 | - கேதா சத்தியாகிரகம் |
| 5. | 1920 | - கிலாபத் இயக்கம் |
| 6. | 1922 | - சௌரி-சௌரா சம்பவம் |
| 7. | 1930 | - முதல் வட்ட மேசை மாநாடு |
| 8. | 1931 | - இரண்டாவது வட்டமேசை மாநாடு |
| 9. | 1932 | - மூன்றாவது வட்ட மேசை மாநாடு |
| 10. | 1935 | - இந்திய அரசு சட்டம் |
| 11. | 1947 | - இந்தியா விடுதலை பெறுதல் |

**குறிப்பு :**

மேலே உள்ள இரண்டு காலக்கோடு தொகுப்புகளிலும் (உலக நிகழ்வுகள், இந்திய நிகழ்வுகள்) தேர்வுக்கு எப்படி கேட்டாலும் (20 ஆண்டுகள் (அ) 25ஆண்டுகள்) கட்டாயம் ஐந்து நிகழ்வுகள் இடம் பெறுமாறு எழுதப்பட்டுள்ளது.



**Prepared :**

**SAI K.THIRUKUNARAN**
B.T.Asst-Social Science
Govt Hr.Se.School - MGR Nagar
Chennai - 600 078
Cell : 9865957299

SAI K.THIRUMARAN GHSS-MGR Nagar CH-78

Padasalai.Net



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593